**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 07.04.2026**

**OS. No. 256/2007**

**வழக்கு சாட்சி DW.3– நித்யாதேவி, த/பெ. ராமராஜ்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தனசேகரன் எனது பெரியப்பா ஆவார் . தாவா சொத்திற்கும், பண்ணைக்காட்டிற்கும் சுமார் 80 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். பிரதிவாதி தோட்டத்திற்கு பக்கத்தில் எனக்கு தோட்டங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான் . எனது சொந்த ஊர் பண்ணைக்காடு . பிரதிவாதி எனது உறவினர் என்பதால் பள்ளத்துக்கால்வாயில் சொத்துக்கள் பிரதிவாதி வசம் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . தாவா சொத்துக்கள் எங்கு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல . தாவா சொத்து ராஜேஸ்வரி வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல . வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . பள்ளத்துக்கால்வாயில் உள்ள மற்ற சாட்சிகளை விசாரிக்காமல் 80 கிலோ மீட்டர் தள்ளி வசித்து வரும் என்னை உறவினர் என்ற அடிப்படையில் மட்டும் சாட்சியம் அளிக்க அழைத்ததன்பேரில் நான் பிரதிவாதி சார்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.04.07 12:41:47 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.